**நிர்மாண உத்தரவாத நிதியம் - 2022**

---------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்மாண உத்தரவாத நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1999 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய நிர்மாண உத்தரவாத நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 11(ஈ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தாயரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமத்திற்கான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது, சொத்துகளின் | பட்டய மதிப்பீட்டாளர்களின் உதவியுடன் அனைத்து குறைபாடுகளையும் | கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க ஆதனம், பொறி மற்றும் |

| | | |
|---|---|---|
| முழு வகுப்பையும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டும். எனினும், அலுவலக உபகரணங்கள், ஏனைய கணனி உபபாகங்கள், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் உட்பட 2018 இற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை நிதியம் மீள்மதிப்பீடு செய்துள்ளது. அந்தச் சொத்துக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 0.32 மில்லியன் கொண்டுசெல்லும் பெறுமதியை கொண்டிருந்தது (கிரயம் ரூபா 9.62 மில்லியன்). இது மீளாய்வாண்டில் ரூபா 1.93 மில்லியனாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது.<br><br>மேலும், நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் தொகை, அறிக்கையிடல் திகதியில் நியாயமான பெறுமதியை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுவதில் இருந்து பொருண்மையாக வேறுபடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு மீள்மதிப்பீடுகள் போதுமான ஒழுங்குமுறையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். தனிப்பட்ட பரீட்சிப்பு இருந்த போதிலும், குழு உறுப்பினர்கள் நிதியத்தால் பயன்படுத்தப்பட்ட ஆண்டுகளின் அடிப்படையில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தனர். எனவே, ரூபா 1.61 மில்லியன் மீள்மதிப்பீட்டு ஆதாயத்தின் சரியான தன்மையை கண்டறிய முடியவில்லை. | சீர்செய்து 2023 ஆம் ஆண்டில் SLPSAS 07 இன் பிரகாரம் முழுமையான மீள்மதிப்பீட்டை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | உபகரணங்களின் முழு வகுப்பையும் மீள்மதிப்பீடு செய்வதற்கு பொருத்தமான முறை பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதியம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி உண்டியல்களில் இருந்து பெறவேண்டிய வட்டி வருமானத்தில் ரூபா 0.29 மில்லியனை அறிக்கையிட்டிருந்த போதிலும் நிதியம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 0.23 மில்லியனை அறிக்கையிட்டிருந்தது. எனவே, மீளாய்வாண்டில் வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி வருமானம் என்பன நிதிக்கூற்றுக்களில் ரூபா 0.06 மில்லியனால் குறைத்தக் காட்டப்பட்டிருந்தன. | மேம்பாட்டிற்காக கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் அடுத்த ஆண்டில் முறைமை சீர்செய்யப்படும். | கணக்கீட்டு சிக்கல்களைத் தீர்ப்பதற்கு முகாமைத்துவம் முயற்சி செய்து கணக்குகள் மீது நெருக்கமான மேற்பார்வை காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இற்கு முன்னர் 06 வங்கிக் கணக்குகளிற்கு கடன்பட்டோர் நேரடியாக வைப்பு செய்த ரூபா 1.50 மில்லியன் இனங்காணப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாத பொறுப்பாக குறிப்பிடப்பட்டதன் விளைவாக, பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | நேரடி வைப்புக்கள் இனங்காணப்படாத கடன் மீதியாக முன்கொண்டு செல்லப்பட்டுள்ளன. அதில், அந்த மீதிகள் 2021 இல் காசுப் புத்தகத்திற்கு வரவு வைக்கப்படும் வரை இனங்காணப்படாத கடன் மீதி கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் இனங்காணப்படாத ரூபா 11,198,921 மீதி இனங்காணப்பட்டு கட்டுப்பாட்டுக் கணக்கிலிருந்து அகற்றப்பட்டு வருமானக் கணக்கு மீதிகளுடன் (தொடர்புடைய கடன்பட்டோர் மீதி) இணக்கம் செய்யப்பட்டது. | வங்கி நேரடி வைப்பு தாமதமின்றி இனங்காணப்பட்டு உரிய கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள விலைப்பட்டியல் கழிவு மீதி ரூபா 10.30 மில்லியனாக இருந்தது. இதற்கு தொழில்தருநர்களால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதமையே காரணமாகும் அதில் ரூபா 10.10 மில்லியன் அல்லது 98 சதவீதம் ஹிரு கென்ஸ்ட்ரக்ஷன் அன்ட் என்டர்பிறைசஸிடமிருந்தும் மீதமுள்ள 02 சதவீதம் அல்லது ரூபா. 0.09 மில்லியன் நவோத் கென்ஸ்ட்ரக்ஷன் சப்ளையயர்ஸ் இடமிருந்தும் 03 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்படாதுள்ளன. | மீள்நிரப்புச் செய்யப்படாத வழக்குகளில் உரிமைகோரப்படாத ஒப்பந்ததாரர்களுக்காக பிணக்குத்தீர்த்தலிற்கு பதிவுசெய்யப்பட்டது. | அந்த விலைப்பட்டியல்களுக்காக தொழில்தருநர்களிடமிருந்து உரிய பணத்தை பெறுவதற்கான சாத்தியத்தன்மையை உறுதிப்படுத்திய பின்னரே அந்த விலைப்பட்டியல் கழிவுகளுக்கான கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டும், ஏனைய சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட முடிவுகளை எடுத்த உத்தியோகத்தர்கள் இதற்குப் பொறுப்பாவார்கள். |
| (ஆ) | கடன்பட்டோர் வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | 2020-2022 காலப்பகுதியின் போது ஏற்பட்ட பொருளாதார மற்றும் | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கும், கடன் மீதிகளை உடனடியாகத் |

| | | | |
|---|---|---|---|
| | நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட்ட பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறவேண்டிய வருமானம் ரூபா 39.52 மில்லியனாகும். வயதுப் பகுப்பாய்வின் பிரகாரம் ஒப்பந்ததாரர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட ரூபா 19.06 மில்லியன் கடன் மீதி இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்ட போதிலும் மேற்கூறிய அதிகமாக அறவிடப்பட்ட மீதியில் இருந்து, 01 முதல் 03 ஆண்டுகள் வரை ரூபா 17 மில்லியன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், கடன் மீதிகள் நிதிக்கூற்றில் கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினங்களின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. | ஏனைய நிலையற்ற தன்மைகளால், அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய பணம் பெறப்படாதமை நிர்மாணத் துறையில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதே காரணத்தினால், பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களிலிருந்து பெறப்பட வேண்டிய வருமானத்தை அறவிடுவதில் நிதியம் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒப்பந்ததாரர்களின் விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்காக வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட போக்குவரத்து பணத்தில் இருந்து முன் அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு பணம் நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அதற்கான கொடுப்பனவுகளை அவர்கள் மேற்கொண்டிருந்தனர். அங்கு கடன்பட்டோர் கடன் மீதிகள் எழுந்துள்ளன. | தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இந்த நிதியம் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு எந்தவித பிணையும் இல்லாமல் பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களை வழங்குகிறதுடன் ஒப்பந்ததாரர்களின் மோசமான செயலாற்றல் சந்தர்ப்பங்களில் தொழில்தருநர் நிதியத்திலிருந்து உத்தரவாதப் பணத்தை கோருகின்றார். 2011 முதல் 2019 வரை 22 சந்தர்ப்பங்களில் ரூபா 87.65 மில்லியன் தொழில்தருநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது, இந்த மீதியில் ரூபா 4.68 மில்லியன் அறவிடப்பட முடியாதிருந்ததுடன் 2019 இல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் பதிவழிக்கப்பட்டது. மேலும், 2020 முதல் 2022 வரை தொழில்தருநர்களுக்கு செலுத்தப்பட்டதும் | சம்பந்தப்பட்ட தொழில்தருநர் கோரிக்கைக்காக விண்ணப்பம் செய்தவுடன், நிதி உத்தரவாதங்களை செலுத்துகிறதுடன் ஒப்பந்ததாரர்களிடமிருந்து அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறது. அந்த சந்தர்ப்பங்களில், ஒப்பந்ததாரர்கள் தங்கள் பணத்தை அவவிடுவதில் தொடர்ந்து தாமதம் செய்வதால், வழக்குகள் சட்ட நடவடிக்கைகளுக்கு நீடிக்கப்பட்டது. தற்போது வரை, சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, இறுதி முடிவில் இருந்து அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிதியமானது ஒப்பந்ததாரர்களின் செயலாற்றலை மேம்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். மேலும் சாதகமான சட்டத் தீர்ப்புக்கள் இருந்தும் பணம் அறவிடப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் இருப்பதால், பயனுள்ள நடவடிக்கையை அறிமுகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒப்பந்ததாரர்களிடமிருந்து நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டியதுமான தொகை ரூபா 30.16 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் தொழில்தருநர்களிற்கு நிதியம் செலுத்திய ரூபா 113.13 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 இற்குள் நிதியத்திற்கு மீள அறவிடப்பட வேண்டியுள்ளது.<br><br>கணக்காய்வின் போது இந்த ரூபா 113.13 மில்லியன் மீதியை அறவிடுவதில் நிச்சயமற்ற நிலைமை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த கடன்பட்டோரிற்காக ரூபா 76.15 மில்லியன் நிதியேற்பாடு அறவிடமுடியா மற்றும் ஐயக்கடனுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக, பிணக்குத்தீர்த்தல் உள்ளிட்ட சட்ட நடவடிக்கைகளின் தீர்ப்புக்கள் நிதியத்திற்கு சாதகமாக இருந்த போதிலும், அது தொடர்பான பணத்தை அறவிட முடியவில்லை. மீளாய்வாண்டில் இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளுக்காக ரூபா 0.80 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. | | |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டில் தொழில்தருநர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 0.14 மில்லியன் தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரரை இனங்காண முடியாமல் போனதால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காமல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான போக்குவரத்து பண மீதியில் காட்டப்பட்டது. | 2016 இல் இனங்காணப்படாத நேரடி வைப்பு மீதியானது அந்த தொகை 05 வருடங்களை விஞ்சியிருந்ததாலும் உரிமையாளரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்பட்டிருக்காத தாலும், நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் 2023 இல் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | நேரடி வைப்புக்களில் தொடர்புடைய ஒப்பந்ததாரரை இனங்காண்பதற்கு பொருத்தமான வழிமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மேலும் உரிமை கோரப்படாத பொறுப்புக்கள் நியாயமான காலத்திற்குள் வருமானமாக இனங்காணப்பட வேண்டும். |

(ஆ) 100,000 கிமீ கிராமிய வீதி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணத் தொழிலை மேற்கொண்டு வரும் 290 ஒப்பந்ததாரர்களின் உத்தரவாதக் கட்டணங்களைச் செலுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ரூபா 30.57 பில்லியனை நிதியத்திற்கு வழங்கியிருந்தது, அதில் ரூபா 29.88 பில்லியன் ஒப்பந்ததாரர்களிற்கு விடுவிக்கப்பட்டது. மேலும், ரூபா 278.83 மில்லியன் தொகை சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படாமல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுக் கணக்கில் நிதியத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த மீதியில் ரூபா 126.53 மில்லியன் 01 ஆண்டு முதலும், ரூபா 146.55 மில்லியன் 1 முதல் 2 ஆண்டுகள் வரையும் ரூபா 5.75 மில்லியன் 02 ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்தி வைக்கப்பட்டது. மேலும், வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் சிக்கலான மற்றும் அபாயகரமான வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கான முறையான உடன்படிக்கையை நிதியம் கொண்டிருக்கவில்லை.

மேலும், பல்வேறு தரப்பினரும் நிதியத்திற்கு வழங்கிய பணத்தில் ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்பட வேண்டிய ரூபா 42.87 மில்லியன் தொகை 2022 திசெம்பர் 31 இல் உரிய ஒப்பந்ததாரர்களுக்கு தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.
தற்போதைய செயற்திட்டங்களில் செயலாற்றல் காணப்படாததால் இந்த மீதியில் ரூபா 10.02 மில்லியன் மற்றும் ரூபா 17.24 மில்லியன் கூட்டுமொத்த தொகைகள் முறையே 01-03 மற்றும் 03-07 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் நிதியத்தால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. எனவே, இந்தத் தொகைகளின் எதிர்காலத் தீர்ப்பனவிற்கான பொறுப்பை

இந்த நிதியமானது தொழில்தருநரால் பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களை வழங்குவதற்கான வாய்மொழிமூல உடன்படிக்கையொன்றை எட்டியது, மேலும் இரு தரப்பினரும் அனைத்து ஒப்பந்ததாரர் கொடுப்பனவுகளையும் நிதியத்தின் மூலம் செலுத்துவதற்கும், அனைத்து ஒப்பந்தங்களின் பௌதீக மற்றும் நிதி நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திய பின்னர் தவணைகளில் அவற்றை விடுவிப்பதற்கும் இணங்கியிருந்தனர்.

முறையான அங்கீகாரத்துடன் உடன்படிக்கை வழங்கப்பட வேண்டும் என்பதை தவிர, வழக்கமான வணிக நடைமுறைகளைப் பின்பற்றி பிணைமுறிகள் மற்றும் உத்தரவாதங்களை நிதியம் வழங்க வேண்டும்.

கணக்காய்வின் போது கண்டறிய முடியவில்லை. இதனால், ஒப்பந்ததாரர்களின் விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்காக தொழில்தருநர் கொடுக்கும் பணத்தை போக்குவரத்துப் பணமாக நீண்ட காலத்திற்கு வைத்திருப்பதில் சிக்கல் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதனால், வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு மற்றும் ஏனைய தொழில்தருநர்களிடமிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து ஆண்டின் போது ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படும் வரை குறுகிய கால முதலீடுகளில் முதலீடு செய்யும் நிதியிலிருந்து ரூபா 74.55 மில்லியன் வருமானத்தை நிதியம் பெற்றிருந்தது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1999 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 9 (இ) பிரிவு | நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை சம்பளம், படிகள் அல்லது கௌரவ (honorarial) சம்பளங்களைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்தில்லாத போதிலும் அவர்களது கடமைகளின் செயலாற்றலில் ஏற்படும் செலவினங்களுக்காக மீள்நிரப்பு செய்யப்படலாம். ஆனால் அதற்கு முரணாக இந்த நிதியம் மாதந்தம் ஒவ்வொரு நம்பிக்கைப்பொறுப்பாளருக்கும் ரூபா 50,000, நிலையான தொகையாக ரூபா 2.50 மில்லியன் மற்றும் ரூபா 2.30 மில்லியன் முறையே 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், நம்பிக்கைப் | நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் விடய இலக்கங்கள் 07, 08 மற்றும் 11 ஆகியவற்றின் சார்பாக நேரடியாக பிணைக்கப்பட்டுள்ளனர், மேலும் அவர்களின் மேலதிக கடமைகள் இனங்காணப்படுகின்றன. இது கடமைகளின் செயலாற்றல் சார்பாக ஏற்பட்ட செலவினமாகக் கருதப்பட வேண்டும். | நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் ஏற்பாடுகளுடன் நிதியம் இணங்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொறுப்பாளர் சபை அதனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேற்கொண்ட செலவினங்களின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்த தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணங்கள் 876(3) | சட்டப்பூர்வமற்ற நிதியத்தை தொடர்வதற்கு ஏதேனும் நியாயமான காரணங்கள் இருந்தால், அந்த நிதியானது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்கப்பட வேண்டும். எனினும், 2023 மார்ச் 31 வரையிலும் நிதியம் இந்த தேவைப்பாட்டுடன் இணங்கியிருக்கவில்லை. | நிதி அமைச்சின் செயலாளரால் இந்த நிதியம் நிறுவப்பட்டது. நிதியத்தின் நடுவராக திறைசேரி செயலாளர் தேவையானவாறு மேலதிக சட்டம் அல்லது பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பார் என நிதியம் எதிர்பார்க்கிறது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(1) | நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மதிப்பாய்வு செய்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நிதியமானது நடாத்தி உரிய காலத்தில் ஆளுநர் சபைக்கு அறிக்கையிடுதல் வேண்டும். இந்த நிதியம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தை நடாத்தியிருக்கவில்லை. மேலும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய அபிவிருத்தி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் இந்த நிதியம் பங்கேற்றிருக்கவில்லை. | நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் ஒவ்வொரு ஆண்டினதும் செயலாற்றல் அறிக்கை, தொடர்ந்துவரும் அடுத்த ஆண்டு சனவரி மாதத்தில் நடுவரிடம் சமர்ப்பிக்கப்படுகிறது. பாராளுமன்றத்தில் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான உட்பிரிவுகளை நடுவர் கொண்டிருக்கிறார் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுடன் இணங்குவதற்கு நிதியம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 285,269,552 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 310,233,611 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 24,964,059 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. பிணைமுறி மற்றும் உத்தரவாத வருமானத்தில் வீழ்ச்சி மற்றும் கூலிகள் மற்றும் சம்பள செலவினங்கள் அதிகரித்தமை என்பன இவ் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் நிறுவன நோக்கங்களின் பிரகாரம், நிறுவனத்திற்குள் கணனிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமையை (குயிக்புக்ஸ்) உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. இந்த முறைமையை கொள்வனவு செய்வதற்கு 2019 ஆம் ஆண்டில் ரூபா 0.16 மில்லியன் தொகை செலவிடப்பட்ட போதிலும் 2022 திசெம்பர் 31 இற்குள் நிதியம் அதன் முழுக் கொடுக்கல்வாங்கல்களையும் கைமுறையாகவும், ஸ்ப்ரெட் ஷீட்டிலும் (எக்செல்) பதிவு செய்துகொண்டே இருந்தது. எனவே, முறைமையை கொள்வனவு செய்வதற்கான கிரயப் பணம் விளைவற்றிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் முழுக் கணக்குகளும், 2020 இன் குறிப்பிடத்தக்க சில மாத பதிவுகளும் குயிக்புக் பொதி (QuickBook package) மூலம் மேற்கொள்ளப்பட்டன, ஆனால் நாட்டின் நிலைமை மற்றும் தொடர்ச்சியின் சிரமம் காரணமாக பாதியிலேயே குறைக்கப்பட வேண்டியிருந்தது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை நியாயப்படுத்தப்படலாம். | கணினிமயமாக்கப்பட்ட கணக்கீட்டு முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். மேலும் செலவிட்ட பணத்திலிருந்து அதிகபட்ச பலனைப் பெற்றுக்கொள்வதற்கு நிதியம் பணியாற்ற வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த நிதியமானது 2015 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா ரெலிகொம் உடன் ரூபா 2.98 மில்லியன் பெறுமதியான முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) வடிவமைத்து அபிவிருத்தி செய்வதற்காக உடன்படிக்கை | தாமதம் காரணமாக ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட முற்பணத் தொகைக்காக போதுமான சேவை வழங்கப்பட்டு திருப்தியடைந்த போதிலும், | ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு செலுத்தப்பட்ட தொகையானது பேச்சுவார்த்தை அல்லது மத்தியஸ்தம் மூலம் |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றை மேற்கொண்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் அபிவிருத்திக்குப் பின்னர் செலுத்தப்பட வேண்டிய முதலாவது தவணை மற்றும் இரண்டாவது தவணை ரூபா 2.08 மில்லியன் அல்லது ஒப்பந்த பெறுமதியில் 70 சதவீதம் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்டது மேலும் இது நிதி நிலைமைக் கூற்றில் மென்பொருள் அபிவிருத்தி முற்பணங்களாக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டது. பணம் செலுத்தப்பட்டு சுமார் 07 வருடங்கள் கடந்துள்ள போதிலும், 2023 மார்ச் 31 வரையிலும் இந்த முகாமைத்துவ தகவல் முறைமையை (MIS) தயாரித்தல் பூர்த்தி செய்யப்படவில்லை. எனினும், உடன்படிக்கையின் கீழ் உள்ள பணிகள் முழுமையாக மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் முற்பணம் மூலதனமாக்கப்பட்டு பெறவேண்டியவைகளாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும் செலுத்திய பணத்தை மீளளிக்குமாறு நிதியம் ஸ்ரீலங்கா ரெலிகொம்மிற்கு அறிவித்திருந்தது. மேலும், உடன்படிக்கையின் 20 ஆம் உறுப்புரையின் பிரகாரம் நிதியமானது பிணக்குத்தீர்த்தல் நடைமுறைகளுக்குள் நுழைவதற்கு அல்லது ஏற்கனவே உள்ள பிரச்சனைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதற்கு நிதியம் நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | கொடுக்கப்பட்ட முழுத் தொகையும் திரும்பக் கோரப்பட்டுள்ளது. எனினும் கொடுப்பனவு பெறப்பட்டிருக்காத பட்சத்தில் நிறுவனம் சேவையைப் பெறும் என்பதால், நிதி இழப்பு எதுவும் ஏற்படாது. உடன்படிக்கை ஏற்கனவே இரத்து செய்யப்பட்டு, செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இல்லை என்றால் பிணக்குத்தீர்த்தலிற்கு செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | உரிய முறையில் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 1999 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த நிதியம் 2000 முதல் 2005 வரையிலான காலப்பகுதியின் போது நான்கு சந்தர்ப்பங்களில் திறைசேரியிடமிருந்து ரூபா 55.00 மில்லியன் வழங்கப்பட்டது. ஆனால் வருடாந்த இலாபத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கான பொறிமுறை எதுவும் காணப்படவில்லை. அதே வேளை 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 949.78 | இந்த நிதியம் ஒரு இலாப நோக்கற்ற சேவை நிறுவனமாக இருப்பதால் திறைசேரிக்கு வருடாந்தம் பணம் அனுப்புவதற்கு மீதி காணப்படவில்லை. உத்தரவாதம் அளிக்கப்பட்ட பெறுவனவுகளின் ஒரு பகுதி எப்போதும் அபாயத்தை ஈடுசெய்வதற்கும், உத்தரவாதங்களை வழங்குவதற்கான அளவு/ | நிதியமானது முற்றிலும் பொது நிறுவன மிகை அல்லது நிதியத்தால் ஈட்டப்படும் மிகைகளின் ஒரு பகுதியை வருடாந்தம் திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிலிருந்து ரூபா 500 மில்லியன் ''உட்கட்டமைப்பு முயற்சிகள்'' என்ற பெயரிடப்பட்ட ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டு, விளைவற்ற நிலையில் இருந்தது. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்திவைக்கப்பட்ட இலாபங்கள் மற்றும் ஒதுக்கங்கள் ரூபா 745.85 மில்லியனாகும். அதே வேளை நீண்ட கால முதலீடுகள் ரூபா 1,072.30 மில்லியனாக இருந்ததுடன் குறுகிய கால முதலீடுகள் ரூபா 1,146.08 மில்லியனாக இருந்தன. | தொடக்க நிலையை அதிகரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.<br><br>நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் 7(இ) இன் கீழ், செயற்பாடுகளில் முழு முடிவுகளையும் எடுப்பதற்கு நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக்கு நடுவர் அதிகாரம் அளித்துள்ளார். மேலும், அந்த ஆண்டுகளின் பாதீட்டில் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | தெற்கு, மத்திய மற்றும் வடக்கு பிராந்திய அலுவலகங்களில் மாதிரி பரீட்சிப்பின் போது தலைமை அலுவலகம் கிளைகளின் செலவினங்கள் தொடர்பாக போதுமான கட்டுப்பாட்டு நடைமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்காதமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் அந்த அலுவலகங்களின் அதிகாரியால் தனிப்பட்ட முறையில் செலவிடப்பட்ட செலவினங்களின் மொத்த தொகை ரூபா 1.08 மில்லியனாக இருந்ததுடன் அந்த செலவினங்களில் மின்சார கட்டணம், தண்ணீர் கட்டணம் மற்றும் தொலைபேசி கட்டணங்கள், காகிதாதி மற்றும் தோட்டாக்கள் (cartridges) என்பனவும் உள்ளடங்குகின்றன. அதைத்தொடர்ந்து, அதிகாரிகளின் செலவினங்களை நிதியம் மீள்நிரப்பு செய்திருந்தது. எனினும் செலவினங்களுக்கு அதிகபட்ச வரம்புகள் எதுவும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காததுடன் முன் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதியமானது ஒரு பிராந்திய அலுவலகத்தை நடாத்தும் திறன் கொண்ட பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது. தேவைப்படும் போது தலைமை அலுவலகத்தின் அங்கீகாரத்துடன் உரிய முடிவை எடுப்பதற்கு அந்த உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. எனவே, நிதியத்தின் முகாமைத்துவம் தேவைப்படும் போது நிதி கட்டுப்பாடுகளுடன் குறைந்த பெறுமதியுள்ள பொருட்களையும் குறைந்த தரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. மீள்நிரப்பு செய்வதற்கு முன்னர் செலவினங்கள் மதிப்பிடப்படும். | கிளைகளின் செலவினங்கள் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(உ) இன் பிரகாரம் நிதியத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் மூன்று மொழிகளிலும் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளின் கீழ் தயாரித்து ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலிருந்து 150 நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் பட்டியல்படுத்துவதற்கு சமர்ப்பிக்க வேண்டும். எனினும், இந்த கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் நிதியத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பான எந்தவொரு சான்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பின்னர் ஒவ்வொரு ஆண்டினதும் செயலாற்றல் அறிக்கை, தொடர்ந்துவரும் ஆண்டின் சனவரி மாதத்தில் நடுவரிடம் சமர்ப்பிக்கப்படுகிறது. நடுவர் உட்பிரிவுகளை கொண்டிருப்பதால் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். | சுற்றறிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க நிதியத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் அனைத்து நடவடிக்கைகளும் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிதியமானது அதன் தொடக்கத்தில் இருந்து நிதியத்தில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தகுதியான கணக்காய்வாளர் ஒருவரை நியமித்திருக்கவில்லை. | காலத்திற்கு காலம் நிதியத்தின் உள்ளக கணக்காய்வு மற்றும் உடனடி கணக்காய்வு மற்றும் மெய்மையாய்வு என்பன நடுவர் சார்பாக திறைசேரியின் (பொது நிதி) பணிப்பாளர் நாயகத்தால் நடாத்தப்படுகின்றன. ஏற்படும் பெரும்பாலான தவறுகளை உடனுக்குடன் சீர்செய்வதற்கு அறிவுறுத்தல்களும் கவனமும் கொடுக்கப்படுகிறது. | நிதியத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் ஒரு சுயாதீன உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டு நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட வேண்டும். |

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையால் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877 (1) இ) இன் பிரகாரம் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையால் எதிர்வரும் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட பாதீடு நடைமுறை ஆண்டின் செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டு தேசிய பாதீட்டு பணிப்பாளரிற்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், 2022 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் பாதீடு மேலே உள்ளவாறு அங்கீகரிக்கப்படவில்லை. | நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட பாதீடு நிதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் நடுவர் அல்லது நிதி அமைச்சின் திறைசேரி செயலாளருக்கு தொடர்ச்சியாக அனுப்பப்பட்டுள்ளது. | வருடாந்த பாதீடு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு திறைசேரியால் அங்கீகரிக்கப்பட வேண்டும். |